# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 13 /2017

Deposition of witness for: PW -8

| | | | |
|---|---|---|---|
| Name | : Baskar | Father/Husband Name | : Kuppusamy |
| Caste | : | Calling | : MV Inspector |
| Religion | : | Age | : |
| Date | : 16.09.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் அவினாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.07.15-ம் தேதி மேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வாளர் நில 1 ஆக பணிபுரிந்தபோது மேலூர் காவல் நிலைய குற்ற எண். 547-15 வழக்கில் சம்மந்தப்பட்ட டி.என். 59 எ.இசட் 9534 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தை பகல் 01.45 மணிக்கு அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது வாகனத்தின் பம்பர் வளைந்திருந்தது. முகப்பு விளக்கு சேதமடைந்த நிலையிலிருந்தது. முன்பக்க இருபக்க இன்டிகேட்டர் சேதமாகியிருந்தது. முன்பற பிரேக்க லிவர் உடைந்திருந்தது. அதனால் தடைதிறன் அறிய இயலவிலை. இந்த விபத்து எந்தவிதமான இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று கூறி சான்று வழங்கினேன். வாகனம் இயக்கும் நிலையில் இல்லை. **(அந்த வாகன தணிக்கை சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அதே வழக்கில் சம்மந்தப்பட்ட டி.என். 29 பி 0619 என்ற பதிவெண்கொண்ட இலகுரக சரக்கு வாகனத்தை 20.07.15-ம் தேதி பகல் 03.10 மணிக்கு அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது மேற்கண்ட வாகனத்தில் சேதம் எதுவும் இல்லை. வாகனத்தின் தடைதிறன் 62 சதவீதம் காணப்பட்டது. இந்த விபத்து எந்தவிதமான இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று கூறி சான்று வழங்கினேன். வாகனம் இயக்கும் நிலையில் இருந்தது. **(அந்த வாகன தணிக்கை சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை

விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட 2 வாகனத்தையும் எனது அலுவலகத்தில் வைத்துதான் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு என்னை போலீசார் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் ஸ்தல ஆய்வு செய்து கிட் மார்க் மற்றும் டயர் மார்க் போன்றவை இருந்ததா என்று உறுதி செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் ஏற்பட்ட சேதாரமானது அந்த வாகனத்தை ஓட்டிய நபர் தானாகவே மரத்தில் மோதினால் அவ்வாறான சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். இந்த வழக்கில் கூறியுள்ளதுபோல் இலகுரக சரக்கு வாகனம் இருசக்கரவாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டிருந்தால் அந்த இலகுரக வாகனத்தில் சிறு சிறு சேதமாகவது ஏற்பட்டிருக்கும் என்றால் எற்பட வாய்ப்புள்ளது.